# அரசு ஊழியர் மற்றும் பொது மக்களுக்கான அஞ்சலக ஆயுள் காப்பீடு

| | |
|---|---|
| **அறிமுகம்** | விரைவு அஞ்சல், நேரடி அஞ்சல், வணிக அஞ்சல், லாஜிஸ்டிக் போஸ்ட், இ-பேமென்ட், இ-போஸ்ட், இணையவழி மணியார்டர், வேஸ்ட்ரன் யூனியன் நிதிப் பரிமாற்றம் உள்ளிட்ட அஞ்சல் மற்றும் நிதிப் சேவைகளை கிராமப்புற மக்களுக்கு இந்திய அஞ்சல் நிறுவனம் அளிக்கிறது. இதனுடன் இருவகையான அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களை அளிக்கிறது. சில ஊரக அஞ்சலக காப்பீட்டுத்திட்டங்கள் அரசு ஊழியர்களுக்கும் மற்றும் சில ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் பொது மக்களுக்கும் உள்ளன. |
| **அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம்** | தபால் மற்றும் தந்தி துறை பணியாளர்களின் நலனுக்காக இந்திய அரசால் 1884 ஆம் ஆண்டு அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இது பற்றி 18-10-1882 தேதியிட்ட அரசு செயலிரின் வெளியீடு குறிப்பிடுகிறது. இத்திட்டம் பணியாளர்களின் அமோக வரவேற்பை பெற்றதால், மத்திய மாநில அரசுகளின் பல்வேறு துறைகள் இதனை அமல்படுத்தின. இன்று இத்திட்டம் மத்திய, மாநில அரசுத்துறை ஊழியர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் ஊழியர்கள் அனைவருக்கும் செயல்படுத்தப்படுகிறது |
| **ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீடு** | மார்ச் 24, 1995 ஆம் ஆண்டு முதல் அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் |

| | |
|---|---|
| | பயன்கள் ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் கிராமப்புற மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. |
| **நோக்கம்** | • ஆயுள் காப்பீட்டுத் துறையில் சந்தையில் முன்னணி நிறுவனமாக திகழ்வது<br><br>• அளிக்கப்படும் பாலிசி திட்டங்கள் மற்றும் சேவைகள் சிறப்பாகவும் நல்ல தரத்துடன் இருக்கின்றன என்று சந்தையில் பெயரை நிலைநாட்டுதல். |
| **செயல் திட்டம்** | 1.5 லட்சம் அஞ்சலகங்களில் 2 லட்சம் தேர்ந்த ஊழியர்களைக் கொண்டு அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை அளிக்கவிருக்கிறோம். இந்திய அஞ்சல் துறை கீழ்க்கண்ட சேவைகளை அளிக்கிறது:<br><br>• ஆயுள் காப்பீட்டு.<br>• ஆயுள் காப்பீட்டுடன் கூடிய சிறந்த முதலீட்டுக்கான வாய்ப்பு.<br>• இந்திய அஞ்சல்துறையின் வாடிக்கையாளர்களுக்குப் பயனளித்தல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல்.<br><br>• வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளில் ஈடுபாடு, மரியாதை மற்றும் சேவைமனப்பான்மையை வெளிப்படுத்துதல். |
| **திட்டத்தின் வகைகள்** | • அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் (அரசு ஊழியர்களுக்கு)<br><br>• ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் (பொது மக்களுக்கு) |

| | |
|---|---|
| **அஞ்சலக ஆயுள் காப்பீட்டு பாலிசி பெறுவதற்கான தகுதிகள்** | • வயது: பயனாளியின் வயது 19 முதல் 50 வயது வரை.<br>• மத்திய, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் இராணுவத்தினர்<br>• அஞ்சல் மற்றும் தொலை தொடர்புத்துறையில் உள்ள ஏஜென்டுகள், தொழிலக மற்றும் தினக்கூலி பணியாளர்கள்<br>• அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், அரசு பல்கலைக்கழகங்கள். மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள்.<br>• தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஆர்பிஐ, எஸ்பிஐயின் துணை நிறுவனங்கள்<br>• மத்திய, மாநில நிறுவனங்கள், கூட்டமைப்புகள், தொழிலகங்கள், யூடிஐ, ஐடிபிஐ முதலிய நிதி நிறுவனங்கள், இஸ்ரோ, கேபிடிசியல், கே.எஸ்.ஆர். டி.சி, எஸ்ஏஜஎல் விஎஸ்என்எல், பிஎஸ்என்எல் |
| **அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள்** | • இந்திய அரசு அளிக்கும் 100% பாதுகாப்பு<br>• பிரிவு 88 இன் கீழ் வருமானவரி விலக்கு.<br>• குறைந்த சந்தா தொகை<br>• அதிக அளவு போனஸ்.<br>• பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்தல், வேறு திட்டத்திற்கு மாற்றம், சரண்டர் செய்தல் மற்றும் கடன் வசதி உண்டு.<br>• கடனை திருப்பி செலுத்தாமல் இருக்கலாம். எனினும் 6 |

| | |
|---|---|
| | மாதத்திற்கு ஒரு முறை வட்டி செலுத்த வேண்டும்.<br>• இந்தியாவின் எந்த பகுதிக்கும் இலவசமாக கணக்கினை மாற்றிக் கொள்ளலாம்.<br>• கடன், வட்டி மற்றும் சந்தா தொகையை எந்த அஞ்சலக கிளையிலும் செலுத்தும் வகையில் பாஸ்புக் வசதி.<br>• நிறுவனங்கள் இருபதுக்கும் மேற்பட்ட பாலிசி எடுத்தால் தங்கள் பணியாளர்களின் சம்பளத்தில் நேரடியாக பிடித்தம் செய்யும் வசதி<br>• மாத, அரையாண்டு அல்லது முழு ஆண்டு சந்தாவை தவணை செலுத்த வேண்டிய மாதத்தின் எந்த ஒரு வேலைநாளிலும் செலுத்தும் வசதி.<br>• தவணைத் தொகையை 6 மாதங்களுக்கு முன்னரே செலுத்தினால் சந்தா தொகையில் 1% தள்ளுபடி அளிக்கப்படுகிறது.<br>• தவணைத் தொகையை 12 மாதங்களுக்கு முன்னரே செலுத்தினால் சந்தா தொகையில் 2% தள்ளுபடி அளிக்கப்படுகிறது.<br>• நாமினேஷன் வசதி உண்டு<br>• சந்தா செலுத்தாததால் முடங்கிய பாலிசியைப் புதுப்பிக்கும் வசதி.<br>• இந்தியாவின் எந்த ஒரு அஞ்சலகத்திலும் பாலிசிக்கான சந்தா செலுத்தும் வசதி.<br><br>• கணிணிமயமாக்கப்பட்ட ஒரு மைய கணக்குமுறைகளால் இன்சூரன்ஸ் இழுப்பீடு அல்லது முதிர்வுத் தொகை பெறுவது எளிமையாக்கப்பட்டுள்ளது. |

<table>
<tr><td>மாற்றுத்திறன் கொண்டவர்களுக்குக்கான திட்டம்</td><td><ul><li>குறைந்தபட்ச காப்பீட்டுத்தொகை = ரூ 10,000/-</li><li>அதிகபட்ச காப்பீட்டுத்தொகை = ரூ. 1,00,000/-</li></ul><ul><li>மேற்கண்ட திட்டத்திற்கு<br>கூடுதல் சந்தா<br>செலுத்த வேண்டும்.<br>நடைமுறையில் உள்ள இதர<br>விதிமுறைகளும் பொருந்தும்.</li></ul></td></tr>
<tr><td>வாடிக்கையாளர் கையேடு</td><td>இப்பகுதி வாடிக்கையாளர்களுக்கும் திட்டங்கள் பற்றிய தகவல்களையும் வழிகாட்டுதல்களையும் அளிக்கும்<br><br>.1. பாலிசி பத்திரங்கள் பெறுதல்<br><br>உங்கள் மாநிலத்தின் அஞ்சலக ஆயுள் காப்பீடு அலுவலகம் உங்களுக்கான பாலிசிப் பத்திரத்தை அவற்றின் ஏற்புக் கடிதத்துடன் வழங்கும். பாலிசியைப் பெறுவதல் தாமதம் ஏற்பட்டால் உங்கள் மாநிலத்தின் இணை/கூடுதல் வட்டார மேலாளரைத் (அஞ்சலக ஆயுள் காப்பீடு) தொடர்பு கொள்ளவும். பாலிசியில் கொடுத்துள்ள விவரங்களை முழுவதுமாக படித்துப் பார்க்கவும்.<br><br>2. சந்தா செலுத்துதல்<br>குறித்தகாலத்தில் பிரிமியம் செலுத்தி பாலிசியை நடப்பில் வைத்து ஆயுள் காப்பீட்டுக்கான முழு பயனை பெறுங்கள்.</td></tr>
</table>

| | |
|---|---|
| | இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள எந்தவொரு அஞ்சலகத்திலும் பிரிமியம் செலுத்தலாம்.<br><br>**3. பாலிசியைப் புதுப்பிப்பது எப்படி?**<br>பாலிசியின் காலம் 3 ஆண்டுகளுக்கு குறைவாகவும் பிரிமியம் செலுத்தாமல் விட்ட காலம் 6 மாதங்களுக்கு குறைவாகவும் (கடைசியாக பிரிமியம் செலுத்திய மாதம் உட்பட) இருக்குமானால், முன் அனுமதியின்றி விடுபட்ட பிரிமியம் தொகையை வட்டியுடன் செலுத்தலாம்.<br>6 மாதங்களுக்குமேல் பிரிமியம் செலுத்தத் தவறியிருந்தால் கீழே கூறியுள்ளபடி முன் அனுமதி பெற வேண்டும்.<br>பாலிசியின் காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவும் பிரிமியம் செலுத்தாமல் விட்ட காலம் 12 மாதங்களுக்கு குறைவாகவும் இருக்குமானால், முன்அனுமதியின்றி விடுபட்ட பிரிமியம் தொகையை வட்டியுடன் அஞ்சலகத்தில் செலுத்தலாம்.<br><br>6 மாதங்களுக்கு மேல் பிரிமியம் செலுத்தத் தவறியிருந்தால் கீழே கூறி உள்ளபடி முன் அனுமதி |

| | |
|---|---|
| | பெற வேண்டும்.<br>பாலிசியைப் புதுப்பிக்க உங்கள் மாநிலத்தின் அஞ்சலக ஆயுள் காப்பீடு அலுவலகத்தை அணுக வேண்டும். மருத்துவச் சான்று, உங்கள் நிறுவன உரிமையாளர் மற்றும் உங்கள் ஒப்புதலைப் பெறுவதற்கான படிவங்களை உங்களுக்கு இவ்வலுவலகம் அனுப்பி வைக்கும்.<br><br>பிரிமியம் செலுத்தியதற்கான ஆதாரத்துடன் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை மாநில அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். பிரிமியம் செலுத்தியதற்கான ஆதாரமாக பணம் செலுத்திய ரசீதையோ அல்லது சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுமானால் சம்பள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றையோ அளிக்கலாம்.<br><br>**4. காசோலை மூலம் சந்தா செலுத்துதல்**<br><br>காசோலை மூலம்<br>சந்தா செலுத்தும்போது உள்ளூர் காசோலை<br>மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்..<br><br>**5. முன்கூட்டியே சந்தா** |

| | |
|---|---|
| | **செலுத்துதல்**<br>பிரிமியம் செலுத்தும்போது 6 மாதங்களுக்கு முன்னர் செலுத்தினால் 1% தள்ளுபடியும் 12 மாதங்களுக்கு முன்னர் செலுத்தினால் 2% தள்ளுபடியும் அளிக்கப்படுகிறது.<br><br>**6. எந்தெந்த அஞ்சலகங்களில் பிரிமியம் செலுத்தலாம்?**<br><br>நீங்கள் எந்தவொரு அஞ்சலகத்திலும் பிரிமியம் செலுத்தலாம். எனினும் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுங்கள்.<br><br>நீங்கள் முதன்முறையாக ஒரு புதிய அஞ்சலகத்தில் பிரிமியம் செலுத்தியிருந்தால் அதன் தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவியுங்கள்.<br><br>நீங்கள் வேறொரு மாநிலத்தில் உள்ள அஞ்சலகத்தில் பிரிமியம் செலுத்தியிருந்தால் சம்மந்தப்பட்ட புதிய மற்றும் பழைய மாநிலங்களில் உள்ள இன்சூரன்ஸ் அலுவலகத்திற்கு தகவல் தெரிவியுங்கள்.<br><br>**7. கடன் பெறுவது எப்படி**<br>பிரிமியம் செலுத்தி நடைமுறையில் இருக்கும் |

| | |
|---|---|
| | என்டோவ்மென்ட் பாலிசிகள் மற்றும் முழு ஆயுள் காப்பீட்டு பாலிசிகளில் (மாற்றத்தக்கது உட்பட) மட்டுமே கடன் வசதி உண்டு. கடன் பெறுவதற்கு பாலிசி பத்திரம் மற்றும் இதுவரை பிரிமியம் செலுத்தியதற்கான சான்று (ரசீது புத்தகம் அல்லது கடைசி ஆறுமாத பிரிமியம் செலுத்தியதற்கான சம்பள அலுவலரிடமிருந்து பெற்ற சான்று) ஆகிய ஆவணங்களை இணைத்து அஞ்சலக ஆயுள் காப்பீட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். நீங்கள் பிரிமியம் செலுத்தும் அஞ்சலத்தில் இருந்து இதனை இலவசமாக அனுப்பலாம். கடன் பெறும்போது கடன் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் உங்கள் பாலிசி முதிர்வுத்தொகையினை பெறும் பொழுது கடன் பத்திரத்தினை திருப்பியளிப்பதற்காக உங்கள் பாலிசி குடியரசு தலைவர் பெயரில் மாற்றம் செய்யப்படும்.<br><br>தற்போது அளிக்கப்படும் கடனுக்கு 10% அரையாண்டு கூட்டுவட்டி விதிக்கப்படுகிறது. கடன் தவணை செலுத்தியததை வரவு வைப்பதற்கு ரசீது புத்தகம் |

வழங்கப்படும் அதில் அரையாண்டு கூட்டு வட்டி தொகை குறிக்கப்பட்டிருக்கும். குறித்த காலத்தில் கடன் தவணையைத் திருப்பிச்செலுத்தி வட்டி பெருகிக்கொண்டு போவதையும் பாலிசி காலாவதியாவதையும் தவிர்த்திடுங்கள். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தவணையில் ரூ.100/- க்கு குறையாத தவணையுடன் கடனை திருப்பிச் செலுத்தவேண்டும்.

வட்டியுடன் கடனை முழுமையாக திருப்பிச் செலுத்தியபின் பாலிசியை உங்கள் பெயருக்கு மாற்ற அஞ்சலக ஆயுள் காப்பீட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பம் அனுப்புங்கள். இரண்டாவது மற்றும் அடுத்தடுத்து பெறும் கடன்கள் சில விதிமுறைகளைப் பின்பற்றி அளிக்கப்படும். எனினும் முதல் கடன் பெற்று குறைந்தது ஓர் ஆண்டு கழித்துதான் இரண்டாவது கடன் அளிக்கப்படும். உங்கள் மாநிலத்தின் எந்தவொரு அஞ்சலகத்திலும் கடனை தவணையைத் திருப்பிச் செலுத்தலாம்.

| | |
|---|---|
| | **8. பாலிசி பத்திரம் தொலைந்தால் மாற்று பத்திரம் பெறும் முறை**<br><br>உங்கள் பாலிசி பத்திரம் மிக முக்கியமான ஆவணம். அதனை கவனமாக வைத்திருங்கள். பாலிசி பத்திரம் தொலைந்துவிட்டாலோ அல்லது சிதைந்துவிட்டாலோ பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி மாற்றுப் பத்திரம் பெறலாம். நீங்கள் பாலிசி எடுத்த மாநிலத்தில் நிலவும் கட்டணத்தின்படி நிதித்துறை சாராத முத்திரைத் தாளில் இருசாட்சிகளுடன் பிரமாணப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். டூப்ளிகேட் பத்திரம் பெற கட்டணம் ரூ.5/- பாலிசி தொகை ரூ.25000/- மேல் இருக்கும் பட்சத்தில் அதிக வாசகர்கள் கொண்ட ஒரு நாளிதழில் பாலிசி பத்திரம் தொலைந்ததற்கான விளம்பர அறிவிப்பு செய்ய வேண்டும்.<br><br>**9. பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்தல்**<br>உங்கள் பெயரில் உள்ள பாலிசியை வேறு ஒருவருக்கு அன்பளிப்பாகவோ அல்லது அவரின்மேல் உள்ள நன்மதிப்பு காரணமாகவோ அவர் பெயரில் |

| | |
|---|---|
| | மாற்றம் செய்யலாம்.<br><br>**10. நாமினேஷனை மாற்றம் செய்தல்**<br>நாமினேஷனை மாற்றம் செய்து கொள்ளும் வசதி உண்டு.<br><br>**11. முதிர்வுதொகையைப் பெறுவது எப்படி?.**<br>அடுத்த பிரிமியம் செலுத்தவேண்டிய நாளை குறித்துக்கொள்ளுங்கள். முடிந்தவரை முதிர்வுதொகையை சீக்கிரம் பெற முயற்சியுங்கள், கடைசி பிரிமியம் செலுத்தியபின் முதிர்வுதொகையைப் பெற கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும்-<br>(1) பாலிசி பத்திரம்<br><br>(2) பிரிமியம் செலுத்தியதற்கான ரசீது புத்தகம்.<br><br>(3) கடன் பெற்றிருந்தால் அதனை திருப்பிச் செலுத்தியதற்கான ரசீது புத்தகம்.<br><br>(4) இறுதி பிரிமியம் உள்ளிட்ட கடைசி ஆறு மாத பிரிமியம் செலுத்தியதற்கான சம்பள அலுவலரிடமிருந்து பெற்ற சான்று.<br>(5) அஞ்சல் காப்பீட்டு அலுவலகத்திலிருந்து அறிவிப்புக் அல்லது நினைவூட்டல் கடிதம் |

| | |
|---|---|
| | வருவதற்கு முன் இன்சூரன்ஸ் தொகையை பெறுவதற்கான நடமுறைகளைத் தொடங்குங்கள்<br>(6) இன்சூரன்ஸ் தொகையை குறித்தகாலத்தில் பெறத் தவறினால், அக்காலத்திற்கு வட்டி அளிக்கப்படமாட்டது. |
| **அரசு ஊழியர்களுக்கான அஞ்சலக ஆயுள் காப்பீடு** | சந்தோஷ் (என்டோவ்மென்ட் திட்டம் )<br>சுரக்ஷா ((முழு ஆயுள் காப்பீடு)<br>சுவிதா (மாற்றத்தக்க முழு ஆயுள் காப்பீடு )<br>சுமங்கல் (ஆன்டிசிபெடட் என்டோவ்மென்ட் திட்டம் )<br>யுகல் சுரக்ஷா ( இணைந்த என்டோவ்மென்ட் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ) |
| **பொது மக்களுக்கான அஞ்சலக ஆயுள் காப்பீடு** | கிராம் சந்தோஷ் (என்டோவ்மென்ட் திட்டம் )<br>கிராம் சுரக்ஷா (முழு ஆயுள் காப்பீடு )<br>கிராம் சுவிதா (மாற்றத்தக்க முழு ஆயுள் காப்பீடு )<br>கிராம் சுமங்கல் (ஆன்டிசிபெடட் என்டோவ்மென்ட் திட்டம் )<br>கிராமப் பிரியா (10 ஆண்டுகள் (ஆர்பிஎல்ஐ) |

| | |
|---|---|
| | குழந்தைகளுக்கான பாலிசி - சிறப்பு அம்சங்கள்<br><br>‘மை சைல்ட் ஃப்ஸ்ட்’ |

## சந்தோஷ் - என்டோவ்மென்ட் திட்டம்

இத்திட்டத்தின்படி பாலிசிதாரர் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட முதிர்வு வயதை அடைந்தவுடன் அவருக்கு போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அளிக்கப்படும். பாலிசிதாரர் மரணம் அடைந்தால் போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அவரின் உரிமை பெற்றவர், நாமினி அல்லது வாரிசுக்கு அளிக்கப்படும்.

- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 50 ஆண்டுகள்
- பிரிமியம் செலுத்துதல் 35, 40, 45, 50, 55, 58 அல்லது 60 வயதுகளில் முடிவுக்கு வரும். (குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பிரிமியம் செலுத்த வேண்டும்).
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.10 லட்சம்
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- 36 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் கடன் பெற தகுதி உண்டு.
- கடனுக்கான வட்டி 10%
- 36 மாதங்களுக்கு மேல் பிரிமியம் செலுத்தியிருந்தால் பாலிசிக்கான சரண்டர் தொகை அளிக்கப்படும்.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- சுரக்ஷா (முழு ஆயுள் காப்பீடு) காப்பீட்டுத் திட்டமாக மாற்றிக்கொள்ளலாம்.
- 35 அல்லது அதற்குகீழ் வயதுள்ளவர்களுக்கு மருத்துவ பரிசோதனை அவசியமில்லை. அதிகபட்ச பாலிசி தொகை ரூ.5 லட்சம்
- நாமினேஷன் வசதி உண்டு

****************

## சுரக்ஷா - முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்

- அதிகபட்ச வயது வரம்பு - 50 ஆண்டுகள்
- பிரிமியம் செலுத்துதல் 55,58 அல்லது 60 வயதுகளில் முடிவுக்கு வரும் (குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பிரிமியம் செலுத்த வேண்டும்).
- வாடிக்கையாளர் இறந்தபின் இன்சூரன்ஸ் தொகை அவரிடம் உரிமம் பெற்றவரிடமோ,அவரால் நியமிக்கப்பட்டவரிடமோ அல்லது அவரின் சட்டப்பூர்வ வாரிசிடமோ அளிக்கப்படும். அதிகபட்ச பாலிசி தொகை ரூ.5 லட்சம்
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- முதிர்வுகாலம் வரை பாலிசிக்கான போனஸ் தொகை அதிகரித்துக் கொண்டே வரும். என்டோவ்மெண்ட் பாலிசியைவிட அதிக போனஸ் மற்றும் குறைந்த பிரிமியம் தொகை.
- 48 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் கடன் பெற தகுதி உண்டு.
- 36 மாதங்களுக்கு மேல் பிரிமியம் செலுத்தியிருந்தால் பாலிசிக்கான சரண்டர் தொகை அளிக்கப்படும்.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- பாலிசி ஒரு வருடத்தைக் கடந்த பின்னரோ அல்லது பயனாளிக்கு 57 வயது முடியும் முன்னரோ என்டோவ்மெண்ட் காப்பீட்டுத் திட்டமாக (சந்தோஷ்) மாற்றிக்கொள்ளலாம்
- நாமினேஷன் வசதி உண்டு

****************

## சுவிதா - மாற்றத்தக்க - முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 50 ஆண்டுகள்
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது.
- 5 ஆண்டுகளுக்குப் பின் 'சுவிதா' திட்டத்தை 'சந்தோஷ்' திட்டமாக மாற்றிக் கொள்ளலாம்.
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.5 லட்சம்
- 50,55 அல்லது 58 வயதுகளில் பாலிசி முதிர்வு பெறும்.
- பிற திட்டங்களுக்கு மாற்றும் பொழுது அப்புதிய திட்டத்தின்படி விதிமுறைகள் மாறுபடும்.
- 'சந்தோஷ்' திட்டத்தில் உள்ளபடி பாலிசிக்கான போனஸ் அளவும் மாறுபடும்.
- 4 ஆண்டுகளுக்குப் பிறகு கடன் வசதி உண்டு.
- 3 ஆண்டுகளுக்குப் பிரிமியம் செலுத்தியபின் பாலிசியை சரண்டர் செய்து கொள்ளலாம்.

- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- நாமினேஷன் வசதி உண்டு
- இத்திட்டம் வருமானவரி கட்டுவோர்க்கும் புதிதாக அரசு வேலையில் சேர்பவர்களுக்கும் மிக உகந்தது. ஏனெனில் இவர்கள் அடுத்த 5 ஆண்டுகளில் தாங்கள் கட்டவேண்டிய வரி மற்றும் உயரும் வருவாயைக் கணக்கில் கொண்டு தங்கள் சேமிப்பைத் திட்டமிடலாம்.

****************

## சுமங்கலி - ஆன்டிசிபெடட் என்டோவ்மென்ட் திட்டம் 'மணிபேக்' குறிப்பிட்ட கால இடைவெளியில் வருவாய் பெற விரும்புவோர்க்கு ஏற்றத் திட்டம்

- வாழும் கால பயன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது.
- வாழும் கால பயன்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட இடைவெளியில் பாலிசிதாரருக்கு அளிக்கப்படும்.

(பாலிசிதாரர் மரணம் அடைந்தால் போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அவரின் நாமினி அல்லது வாரிசுக்கு அளிக்கப்படும், அப்போது முன்னர் அவர்க்கு அளிக்கப்பட்ட வாழும் கால பயன்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை).

- இருவகை பாலிசிகள் 15 ஆண்டுகால பாலிசி மற்றும் 20 ஆண்டுகால பாலிசி
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.5 லட்சம்.
- கடன் வசதி இல்லை.
- சரண்டர் செய்தால் பணம திரும்பத்தரப்பட மாட்டாது.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- நாமினேஷன் வசதி உண்டு
- வாழும் கால பயன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| **15 ஆண்டு பாலிசி** | **20 ஆண்டு பாலிசி** | **பாலிசியை வாபஸ் பெற்றால்** |
|---|---|---|
| 6 ஆண்டுகள் முடிவில் | 8 ஆண்டுகள் முடிவில் | 20% பாலிசி தொகை |

| | | |
|---|---|---|
| 9 ஆண்டுகள் முடிவில் | 12 ஆண்டுகள் முடிவில் | 20% பாலிசி தொகை |
| 12 ஆண்டுகள் முடிவில் | 16 ஆண்டுகள் முடிவில் | 20% பாலிசி தொகை |
| 15 ஆண்டுகள் முடிவில் | 20 ஆண்டுகள் முடிவில் | 40% பாலிசி தொகை மற்றும் போனஸ் |

## யுகல் சுரக்ஷா - அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

- இந்த இணைந்த என்டோவ்மென்ட் திட்டத்தில் பாலிசிதாரர் மற்றும் அவரின் ஒரு துணையும் அஞ்சலக காப்பீடு பெற தகுதிஉடையவர் ஆவார்கள்.
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து பாலிசிதாரர் மற்றும் அவரின் ஒரு துணை ஆகிய இருவருக்கும் போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அளிக்கக்கூடிய காப்பீடு பெறுகிறார்கள்.
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- 5 முதல் 20 ஆண்டுகள் வரை பாலிசியின் காலமாக நிர்ணயித்துக் கொள்ளலாம்.
- பாலிசிதாரர் மற்றும் அவரது துணைவருக்கும் (கணவன்/மனைவி) காப்பீடு அளிக்கிறது.
- குறைந்தபட்ச வயது வரம்பு - 21 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 45 ஆண்டுகள்
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.5 லட்சம்
- 3 ஆண்டுகளுக்குப் பின் பாலிசிக்கான சரண்டர் தொகை அளிக்கப்படும்.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- நாமினேஷன் வசதி உண்டு

****************

## கிராம் சந்தோஷ் - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - என்டோவ்மெண்ட் காப்பீட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்படி பாலிசிதாரர் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட முதிர்வு வயதை அடைந்தவுடன் அவருக்கு போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அளிக்கப்படும். பாலிசிதாரர் மரணம் அடைந்தால்

போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அவரின் உரிமை பெற்றவர், நாமினி அல்லது வாரிசுக்கு அளிக்கப்படும்.

- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 55 ஆண்டுகள். மேலும் பாலிசி தொகை ரூ.1 லட்சத்திற்கு மேல் இருந்தால் அதிகபட்ச வயது வரம்பு 45 ஆண்டுகள்.
- பிரிமியம் செலுத்துதல் 35, 40, 45, 50,58 அல்லது 60 வயதுகளில் முடிவுக்கு வரும் (குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பிரிமியம் செலுத்த வேண்டும்).
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.2 லட்சம்.
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது.
- 36 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் கடன் பெற தகுதி உண்டு.
- கடனுக்கான வட்டி 10%
- 36 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் பாலிசியை சரண்டர் செய்து கொள்ளலாம்.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு.
- சுரக்ஷா (முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்) பாலிசியாக மாற்றிக் கொள்ளலாம்.
- இன்சூரன்ஸ் தொகை ரூ.25,000/- கீழ் பாலிசி எடுப்பவர்களுக்கு அல்லது 35 அல்லது அதற்குகீழ் வயதுள்ளவர்களுக்கு மருத்துவ பரிசோதனை அவசியமில்லை.
- நாமினேஷன் வசதி உண்டு

***************

**கிராம் சுரக்ஷா - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் .**

இத்திட்டத்தின்படி பாலிசிதாரர் மரணம் அடைந்தால் போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அவரின் உரிமை பெற்றவர், நாமினி அல்லது வாரிசுக்கு அளிக்கப்படும்.

- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 55 ஆண்டுகள் மேலும் பாலிசி தொகை ரூ.1 லட்சத்திற்கு மேல் இருந்தால் அதிகபட்ச வயது வரம்பு 45 ஆண்டுகள்.
- 50,58 அல்லது 60 வயதுகளில் பாலிசி முதிர்வு பெறும்.
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.2 லட்சம்
- 48 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் கடன் பெற தகுதி உண்டு.

- கடனுக்கான வட்டி 10%
- 3 ஆண்டுகளுக்குப் பிரிமியம் செலுத்தியபின் பாலிசியை சரண்டர் செய்து கொள்ளலாம்.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- கிராம் சந்தோஷ் பாலிசியாக மாற்றிக் கொள்ளலாம். (என்டோவ்மெண்ட் பாலிசி)
- நாமினேஷன் வசதி உண்டு

## கிராம் சுவிதா - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - மாற்றத்தக்க முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் .

- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது.
- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 45 ஆண்டுகள்
- பிரிமியம் செலுத்துதல் 50,58 அல்லது 60 வயதுகளில் முடிவுக்கு வரும் (குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பிரிமியம் செலுத்த வேண்டும்).
- அதிகபட்ச பாலிசிதொகை ரூ.1 லட்சம்
- 48 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் கடன் பெற தகுதி உண்டு.
- கடனுக்கான வட்டி 10%
- 36 மாதங்கள் பிரிமியம் செலுத்தியபின் பாலிசியை சரண்டர் செய்து கொள்ளலாம்.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- 5 ஆண்டுகளுக்குப் பின் கிராம் சந்தோஷ் (என்டோவ்மெண்ட் பாலிசி) பாலிசியாக மாற்றிக் கொள்ளலாம். (இத்திட்டத்தின்படி பிரிமியம் செலுத்தும் வயது வரம்பு நிர்ணயிக்கப்படும்)
- நாமினேஷன் வசதி உண்டு

***************

## கிராம சுமங்கலி - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - ஆன்டிசிபெடட் என்டோவ்மென்ட் திட்டம் - 'மணிபேக்' பாலிசி

- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- வாழும்கால பயன்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட இடைவெளியில் பாலிசிதாரருக்கு அளிக்கப்படும்.

(பாலிசிதாரர் மரணம் அடைந்தால் போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அவரின் நாமினிக்கு அளிக்கப்படும்போது இதற்கு முன்னர் அவர்க்கு அளிக்கப்பட்ட வாழும் கால பயன்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை).

- இருவகை பாலிசிகள் 15 ஆண்டு பாலிசி மற்றும் 20 ஆண்டு பாலிசி
- குறைந்தபட்ச வயது வரம்பு - 21 ஆண்டுகள் மற்றும் அதிகபட்ச வயது வரம்பு - 40 ஆண்டுகள்
- அதிகபட்ச பாலிசி தொகை ரூ.1 லட்சம்.
- கடன் வசதி இல்லை.
- சரண்டர் செய்தால் பணம் திரும்பத்தரப்பட மாட்டாது.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு
- நாமினேஷன் வசதி உண்டு
- வாழும் கால பயன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| **15 ஆண்டு பாலிசி** | **15 ஆண்டு பாலிசி** | **பாலிசியை வாபஸ் பெற்றால்** |
|---|---|---|
| 6 ஆண்டுகள் முடிவில் | 8 ஆண்டுகள் முடிவில் | 20% பாலிசி தொகை |
| 9 ஆண்டுகள் முடிவில் | 12 ஆண்டுகள் முடிவில் | 20% பாலிசி தொகை |
| 12 ஆண்டுகள் முடிவில் | 16 ஆண்டுகள் முடிவில் | 20% பாலிசி தொகை |
| 15 ஆண்டுகள் முடிவில் | 20 ஆண்டுகள் முடிவில் | 40% பாலிசி தொகை மற்றும் போனஸ் |

## கிராமப் பிரியா - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - 10 ஆண்டு ஆன்டிசிபெடட் என்டோவ்மென்ட் திட்டம்

- - பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- 10 ஆண்டுகள் வரை போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகைக்கு காப்பீடு அளிக்கப்படும்.

- குறைந்தபட்ச வயது வரம்பு - 19 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 45 ஆண்டுகள்
- புயல், வெள்ளம், வறட்சி மற்றும் பூகம்பம் போன்ற இயற்கை பேரிடர்களின்போது செலுத்தாமல்விட்ட பிரிமியத்தை மீண்டும் செலுத்தும்போது ஓர் ஆண்டுவரை வட்டி இல்லை.
- வாழும் கால பயன்களாக அளிக்கப்படும் தொகை:
    - 4 ஆண்டுகள் முடிவில் - 20% பாலிசி தொகை
    - 7 ஆண்டுகள் முடிவில் - 20% பாலிசி தொகை
        - 10 ஆண்டுகள் முடிவில் - 60% பாலிசி தொகை மற்றும் போனஸ்
- நாமினேஷன் வசதி உண்டு
- சரண்டர் செய்தால் பணம திரும்பத்தரப்பட மாட்டாது.
- பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி உண்டு

## [ குழந்தைக்கான பாலிசி - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம் -- சிறப்பு அம்சங்கள்

- அஞ்சலக/ஊரக அஞ்சல் இன்சூரன்ஸில் என்டோவ்மென்ட் அல்லது முழு ஆயுள் காப்பீடு திட்டத்தில் பாலிசி வைத்திருப்பவர்கள் தங்கள் குழந்தையின் பெயரில் பாலிசி எடுக்கலாம்.
- குறைந்தபட்ச வயது வரம்பு – 5 ஆண்டுகள்
- அதிகபட்ச வயது வரம்பு - 20 ஆண்டுகள்

  (முதன்மை பாலிசி வைத்திருப்போரின் வயது 45 ஆண்டுகளுக்கு குறைவாக இருக்க வேண்டும்.)

- குறைந்தபட்ச பாலிசி தொகை ரூ.20,000 அதிகபட்ச பாலிசி தொகை ரூ.5 லட்சம்
- எனினும் குழந்தைக்கான பாலிசி தொகை முதன்மை பாலிசியின் இன்சூரன்ஸ் தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கவேண்டும்.
- பாலிசி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் அல்லது முதல் முழு பிரிமியம் செலுத்திய தேதி இதில் எது இரண்டாவதாக வருகிறதோ அன்றிலிருந்து ஆயுள் காப்பீடு ஆரம்பம் ஆகிறது
- இது முழு பயன் அளிக்கக்கூடிய மருத்துவம் அல்லாத காப்பீடுத் திட்டம்.
- பிஜஒஎ.ஃப் விதிப்படி, பாலிசியை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யும் வசதி யும் நாமினேஷன் வசதியும் உண்டு
- கடன் வசதி இல்லை, எனினும் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பிரிமியம் செலுத்தியபின் முதன்மை பாலிசியின் விதிகளின்படி கடன் பெறலாம்.

- பாலிசி முதிர்வடையும்போது அல்லது குழந்தையின் மரணம் ஏற்படும்போதோ போனஸுடன் கூடிய இன்சூரன்ஸ் தொகை அளிக்கப்படும்.
- குழந்தைக்கான பாலிசி முதிர்வடையும் முன்பே முதன்மை பாலிசி வைத்திருப்பவர் இறக்க நேர்ந்தால் மேற்கொண்டு இப்பாலிசிக்கான பிரிமியம் செலுத்தத் தேவையில்லை.

## ரூ.1000/- அளிக்கும் குழந்தைகளுக்கான பாலிசியின் பிரிமீயம் தொகை

| பாலிசி தொடங்கும்போது உள்ள வயது | பாலிசி முதிர்வடையும் போது உள்ள வயது | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 5 | 8.13 | 7.67 | 7.27 | 6.93 | 6.63 | 6.36 | 6.13 | 5.92 |
| 6 | 8.68 | 8.13 | 7.67 | 7.27 | 6.93 | 6.63 | 6.36 | 6.13 |
| 7 | 9.33 | 8.68 | 8.13 | 7.67 | 7.27 | 6.93 | 6.63 | 6.36 |
| 8 | 10.11 | 9.33 | 8.68 | 8.13 | 7.67 | 7.27 | 6.93 | 6.63 |
| 9 | 11.07 | 10.11 | 9.33 | 8.68 | 8.13 | 7.67 | 7.28 | 6.93 |
| 10 | 12.28 | 11.07 | 10.11 | 9.33 | 8.68 | 8.13 | 7.67 | 7.28 |
| 11 | 13.85 | 12.28 | 11.07 | 10.11 | 9.33 | 8.68 | 8.13 | 7.67 |
| 12 | 15.94 | 13.85 | 12.28 | 11.07 | 10.11 | 9.33 | 8.68 | 8.13 |
| 13 | 18.88 | 15.94 | 13.85 | 12.28 | 11.07 | 10.11 | 9.33 | 8.68 |
| 14 | | 18.88 | 15.94 | 13.85 | 12.28 | 11.07 | 10.11 | 9.33 |
| 15 | | | 18.88 | 15.94 | 13.85 | 12.28 | 11.07 | 10.11 |
| 16 | | | | 18.88 | 15.94 | 13.85 | 12.28 | 11.07 |
| 17 | | | | | 18.88 | 15.94 | 13.85 | 12.28 |
| 18 | | | | | | 18.88 | 15.94 | 13.85 |
| 19 | | | | | | | 18.88 | 15.94 |
| 20 | | | | | | | | 18.88 |




**‘மை சைல்ட் ஃப்ஸ்ட்’ - ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டம்**

மத்திய தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ராசா அவர்கள் ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்வரும் ‘மை சைல்ட் ஃப்ஸ்ட் என்ற புதிய சேவையை கோவை மாவட்டம் அவினாசியில் தொடங்கிவைத்தார். தங்கள் குழந்தைகளின் மேற்படிப்புக்கான சேமிப்பை இன்சூரன்ஸ் திட்டத்தில் முதலீடு செய்யும் பழக்கத்தை கிராமப்புற மக்களிடம் ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**சிறப்பு அம்சங்கள்:**

முதிர்வுத் தொகை ரூ.50,000 முதல் ரூ.3 லட்சம் வரை உள்ளது. இது 15 ஆண்டுகளுக்குப்பின் மக்கள் தங்கள் குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்குப் போதுமானதாக இருக்கும். பிரிமீயம் தொகை

முழுவதும் தொகுப்புநிதிக்குச் செல்லும். செலுத்திய பணம் முழுவதும் போனஸுடன் திரும்பக் கிடைக்கும். “இன்சூரன்ஸ் செய்த பணம் 15 ஆண்டுகளில் இருமடங்காகும்” .

*********************************